1974 மார்ச் 21]

பட்டிருப்பதால் ஓட்டுநர்கள் புதிய கட்டணமாக என்ன தொகை கேட்கிறர்களோ, அதைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. புதியக் கட்டணத்திற்கான அட்டைகளை அவர்கள் காட்டுவதில்லை. ஆகவே, உடனடியாக புதிய கட்டண விதத்தில் மீட்டர்களை மாற்றி அமைக்க உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, புதிய கட்டண விதத்தில் மீட்டர்களை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மீட்டர்கள் திருத்தி அமைக்கப்படும் வரையில் புதிய கட்டண விகிதங்களைக் காட்டுகின்ற அட்டைகளை பயணிகளிடம் காட்டி, அதற்குரிய கட்டணங்களைப் பெற்றுக்கொள்ள உத்தரவு இருக்கிறது. அதற்கு மேற்பட்டு யாரும் வாங்கக்கூடாது.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவரவர்களே, கோவை ஆட்டோ ரிக்சா சங்கத்திடமிருந்தும், இதர பிற சங்கங்களிடமிருந்தும் 'நாங்கள் மீட்டரைப் பொருத்திக்கொள்கிறேம்; புதிய கட்டணத்தை உடனடியாக அமுல் படுத்திக்கொடுத்தால் அதற்குத் தகுந்தமுறையில் திருத்தி அமைத்துக் கொள்கிறேம்' என்று அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா ? வந்திருக்கிறது என்றால் அதன்மீது என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மீட்டர்களைப் பொருத்திக்கொள்வதாளுல் அரசு வரவேற்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

சென்னை நகரில் சமையல் வாயுக்கள்
குறையும் அதனுல் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லலும் குறித்து

THIRU G. R. EDMUND : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the serious shortage of cooking gas in Madras city causing hardships to the people.

[1974 மார்ச் 21

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே,

சென்னை மாநகரில் நுகர்வோர்களுக்கு "இன்டேன்", "கால்காஸ்" என்ற இரண்டு வகை சமையல் வாயுக்கள் வழங்கப் படுகின்றன. இன்டேன் வாயு சென்னை எண்ணெய் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு, இந்திய எண்ணெய் கழகத்தால் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு, ஆந்திரா, மைசூர் மாநிலங்களிலுள்ள சென்னை மாநகர் உட்பட 55 அங்காடி நிலையங் களுக்கு இவை வழங்கப்படுகின்றன. கால்காஸ் விசாகப் பட்டினத்தில் உள்ள கால்டெக்ஸ் எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு சென்னை, ஈஸ்ட் கோஸ்ட் காஸ் நிறுவனத்தால் சென்னை மாநகர், சேலம், வேலூர், ஈரோடு, காஞ்சிபுரம், புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரிலும், சுற்றுப்புறப்பகுதிகளிலும் 46,000 பேர் 'இன்டேன்' வாயுவைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு மாதமொன்றுக்கு சராசரியாக 1,050 டன் வாயு தேவைப்படுகிறது. தமிழ்நாடு, மைசூர், ஆந்திரா ஆகிய இடங்களில் உள்ள ஏனைய பகுதியினருக்கு மாதமொன்றுக்கு சுமார் 1,200 மெட்ரிக் டன் வாயு தேவைப்படுகிறது. சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை மாதமொன்றுக்கு சுமார் 2,000 முதல் 2,200 மெட்ரிக் டன் இன்டேன் வாயுவை உற்பத்தி செய்கிறது; இந்த வாயு வழங்கப்படுகிற சென்னை மாநகரிலும் ஏனைய அங்காடிப் பகுதி களிலும் இந்த வாயு பயன்படுத்துவர்களின் தேவையை நிறைவு செய்ய ஏறத்தாழ இது போதுமானதாகும். எனவே, இன்டேன் வாயு வழங்குவதில் பற்றாக்குறை ஏதும் இல்லை. ஆனால், இன்டேன் வாயுவை வழங்குமாறு கேட்டு சுமார் 25,000 பேர் தங்கள் பெயரைப் பதிவு செய்துள்ளனர். ஆனால், இந்த வாயு குறிப்பிட்ட அளவுக்கே வழங்கப்படுவதனால், புதிதாக எவரையும் பதிவு செய்து கொள்ள இயலாது. தங்களது உலைகளில் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவை பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, அதற்குப்பதிலாக எண்ணெயைப் பயன்படுத்தி அதன் மூலம் மீதமாகும் வாயுவை பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்ய சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை நடவடிக்கை எடுத்துவருவதாக கூறப்படுகிறது. சென்னை,

எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையிலிருந்து தற்போது கிடைத்துவரும் வாயுவை கோயம்புத்தூருக்கும் ஏனைய சில பகுதிகளுக்கும் வழங்க இயலும் பொருட்டு, கொச்சி எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையில் திரவ பெட்ரோலியம் வாயுவின் உற்பத்தியை நிலைப்படுத்துவதற்கான திட்டங்களும் உள்ளன. இத்திட்டங்கள், நிறைவேற்றப்பட்டால், சென்னை மாநகருக்கும், பிற பகுதிகளுக்கும் அதிக அளவில் இன்டேன் வாயு வழங்கவும் வாயு வழங்கப்படுவதற்கான பட்டியலில் புதிதாகப் பலரைச் சேர்த்துக் கொள்ளவும் இயலும்.

சென்னை மாநகரில் 26,300 பேர் கால்காஸ் வாயுவைப் பயன்படுத்துகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக சுமார் 280 மெட்ரிக் டன் கால்காஸ் தேவைப்படுகிறது. தென் கிழக்கு ரயில்வே போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் கல்கத்தாவிலிருந்து விசாகப்பட்டினத்திற்கு வாகன்களை திருப்பி அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. விசாகப்பட்டினத்திற்கும் சென்னைக்குமிடையே வாகனங்களைக் கொண்டு செல்வதில் இடற்பாடுகள் ஏற்பட்டன. இதனுல், சென்னை மாநகருக்குக் கீழ்க்காணும் அளவுகளில் மட்டுமே கால்கேஸ் சென்னை ஈஸ்ட் கோஸ்ட் காஸ் நிறுவனத்தால் வழங்க இயன்றது :—

டிசம்பர்	223 டன்
ஜனவரி	181 டன்
பிப்ரவரி	158 டன்

தமிழ் நாட்டில் சென்னை மாநகரிலும் ஏனைய பகுதிகளிலும் கால்காஸ் கிடைப்பதில் ஏற்பட்ட பற்றுக்குறைக்கு இதுவே காரணமாகும். வாகன நிலைமையை சீர்படுத்தி, தமிழ்நாட்டில் சென்னை மாநகருக்கும் ஏனைய பகுதிகளுக்கும் கால்காஸ் அதிக அளவில் வழங்கப்படுவதற்கு கால்டெக்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.